**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை

(மஸ்ரப்)

தரமணி, சென்னை

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 15-04-2025**

**சிவகங்கை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2025-04-15 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2025-04-16 | 2025-04-17 | 2025-04-18 | 2025-04-19 | 2025-04-20 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 37.0 | 37.0 | 37.0 | 38.0 | 38.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 26.0 | 26.0 | 26.0 | 27.0 | 27.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 45 | 45 | 45 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 2 | 2 | 2 | 2 | 2 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 180 | 200 | 220 | 250 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 3 | 3 | 4 | 4 |
| எச்சரிக்கை | எச்சரிக்கை இல்லை | எச்சரிக்கை இல்லை | எச்சரிக்கை இல்லை | எச்சரிக்கை இல்லை | எச்சரிக்கை இல்லை |

## முன்னறிவிப்பு சுருக்கம்:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 16, 17, 18, 19 மற்றும் 20ம் தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 2 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### வானிலை எச்சரிக்கைகள் (பிறந்த நாளின் 08:30 IST வரை சரியானது):

Nil

### வானிலை எச்சரிக்கைகளின் விவசாயம் மீது சாத்தியமான விளைவுகள் மற்றும் தொடர்புடைய அகரோமெட் ஆலோசனைகள்:

Nil

### பொது ஆலோசனை:

அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (18 -24 ஏப்ரல் 2025): மழைப்பொழிவு : 18-04-2024 – 24-04-2025: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை : 18-04-2025 – 24-04-2025: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு. குறைந்தபட்ச வெப்பநிலை : 18-04-2025 – 24-04-2025: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

### குறுஞ்செய்தி :

ஏப்ரல் 16, 17, 18, 19, 20 தேதி லேசான மழைக்கு வாய்ப்பு. வெப்பநிலை: (அதி)- 37°-38° (குறை)- 26°-27° செல்சி. வானம்: மிதமான மேகமூட்டம். காற்றின் வேகம் :மணிக்கு 2 கி.மீ, திசை: தெ.மே, தெ.

### தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | மிளகாய்ப் பயிரில் இலைப் பேன் தாக்குதல் தென்படுகின்றது. இதன் தாக்குதலால் இலைகளில் சுருக்கங்கள் ஏற்படும், இலைகள் மேல் நோக்கி சுருண்டு விடும், இலைக் காம்பு நீண்டு விடும். செடிகளின் வளர்ச்சி குறைவதோடு, பூ மற்றும் காய்கள் உற்பத்தி தடைபடும், மொக்குகள் எளிதில் உதிர்ந்து விடும். இதன் தாக்குதலை குறைக்க அகத்தியை ஊடு பயிராக பயிரிடலாம். மிளகாய் நாற்றுகளின் மேற்பரப்பில் நீரைத் தெளித்து பேன்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம். மேலும் இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மிலி. என்ற அளவில் இமிடாக்குலோபிரிட் என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை கலந்து தெளிக்கவும். உரம் வைத்தல் மற்றும் மருந்து தெளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும். |
| வாழை | வாழை பயிரிடும் விவசாயிகள் தங்களுடைய வாழை பயிருக்கு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மண்வெட்டி அல்லது கொத்து கொண்டு மண் அணைக்க வேண்டும். மாதம் ஒரு முறை பக்கக் கன்றுகளை கவனமாக அகற்ற வேண்டும். காய்ந்த மற்றும் நோய் தாக்கப்பட்ட இலைகளைச் சேகரித்து எரித்து விட வேண்டும். இவ்வாறு செய்தால் வாழை பயிரைத் தாக்கும் இலைப் புள்ளி நோய் பரவுவதை பெரிதும் கட்டுப்படுத்தலாம். உரம் வைத்தல் மற்றும் மருந்து தெளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | தற்போது நிலவும் வெப்பமான சூழ்நிலையிலிருந்து தங்களது கால்நடைகளை காப்பாற்ற பகல் நேரங்களில் அரை மணி நேரத்திற்கு ஒரு முறை அவற்றின் உடம்பில் தண்ணீரை பீய்ச்சி அடிக்கவும். நிழற்ப்பாங்கான இடத்தில் 24 மணி நேரமும் போதுமான அளவு குடி நீரினை குடிப்பதற்காக வைக்கவும். தங்களது கால்நடைகளை அதிகாலை, மாலை மற்றும் இரவு நேரங்களில் உணவு எடுத்துக்கொள்ளப் பழக்கப்படுத்துங்கள். அதிகாலை மற்றும் அந்திமாலை நேரங்களில் மட்டும் மேய்ச்சலுக்கு விடுவதன் மூலம் கடுமையான வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்கலாம். |
| பசு | இடி மின்னல் எச்சரிக்கை: மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் 16.04.2025 மற்றும் 17.04.2025 தேதி இடி மின்னலுடன் கூடிய |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | லேசான மழைக்கு வாய்ப்பு. கால்நடைகளை மின்கம்பம் மற்றும் மரத்தடியில் கட்டுவதை தவிர்த்து பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கவும். இடி மின்னலில் இருந்து தங்கள் கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு கழுத்தில் கட்டியுள்ள உலோக மணிகளை அகற்றிவிடவும். |

## வானிலை எச்சரிக்கைகளின் சாத்தியமான விளைவுகள் (பொதுவான):

| |
|---|
| Nil |

## தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவுரை (பொது):

| |
|---|
| Nil |

**Farmers are advised to download Unified �Mausam� and "Meghdoot" android application on mobile for Weather forecast and weather based Agromet Advisories and "Damini" android application for forecast of Thunderstorm and lightening.**

**Mausam MobileApp link: https://play.google.com/store/apps/details/**

**Meghdoot MobileApp link: https://play.google.com/store/apps/details**

**Damini MobileApp link : https://play.google.com/store/apps/details**